
மாலை முரசு

பக்கங்கள் 20+ 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 29 வியாழக்கிழமை 12.06.2024 | அதிர்வு 313

**242 பேருடன் இன்று பயணித்த ஏர் இந்திய விமானம் விபத்து!**

**குஜராத்தில் பெரும் துயரம்**



18▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# காணி கபளீகர வர்த்தமானியை ஆட்சேபித்து சுமந்திரன் வழக்கு

வடக்கில் சட்ட ஆவண ரீதியாக உரிமை நிரூபிக்கப்படாத தனியாரின் காணிகளை அரசு கபளீகரம் செய்வதற்கு வழி செய்யும் விதத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்ததை இடைநிறுத்தும்படி உத்தரவிடவும், செல்லுபடியற்றதாக அறிவிக்கவும் கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் வழக்கு ஒன்றை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மனுதாரராகத் தாக்கல் செய்துள்ளார்.

காணி ஆணையாளர் நாயகம், காணி உரித்து நிர்ணய ஆணையாளர், காணி அமைச்சின் செயலாளர், காணி 02▶



# சாணக்கியனின் இடத்தில் தமிழரசு கடும் போட்டிக்கு மத்தியில் வெற்றி

## களுவாஞ்சிக்குடியில் திசைகாட்டிக்கு 'சங்கு' வாக்களித்தது என அவர் சீற்றம்




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் பிரதேசமான களுவாஞ்சிக்குடியை உள்ளடக்கிய மண்முனை தெற்கு பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவில் கடும் போட்டிக்கு மத்தியில் தமிழரசுக் கட்சி தலைமைப் பதவியைக் கைப்பற்றியது.

இதற்காக நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் மேகசுந்தரம் வினோராஜ் பத்து வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் கணேசநாதன் 9 வாக்குகளையும் பெற்றதனால் தமிழரசுக் கட்சி சபையைக் கைப்பற்றியது. 02▶

# சாவகச்சேரியில் சைக்கிளில் தெரிவான இருவருக்கு எதிரான வழக்கு நாளைக்கு

## இன்று உயர்நீதிமன்றத்தில் தீர்மானம்

(ந.லோகதயாளன்)

சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபைக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தேர்வான இருவர் அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினர்களாகப் பதவியேற்பதற்கு எதிராகத் தடை விதிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் 04▶







# பருத்தித்துறையில் மனித எலும்புக்கூடு

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். பருத்தித்துறையில் மனித மண்டையோட்டுடன் கூடிய மனித எலும்பு எச்சங்கள் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியில் அண்மையில் விடுவிக்கப்பட்ட இராணுவ முகாம் அருகில் உள்ள பகுதியிலேயே மண்டையோட்டுடன் கூடிய மனித எலும்பு எச்சங்கள் காணப்படுகின்றன.

கடந்த ஆண்டு பருவமழையின் போது ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் 78 வயதான முதியவர் ஒருவர் காணாமல்போயிருந்தார். ஆகவே, அவரது எலும்பு எச்சங்களாக இருக்கலாம் என அந்தப் பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பாகப் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.





## சாணக்கியனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சபையில் தமிழரசுக் கட்சிக்கு எட்டு இடங்களும், தேசிய மக்கள் சக்திக்கு ஆறு இடங்களும் கிடைத்தன.

தமிழரசுக் கட்சியோடு தலா ஓர் உறுப்பினரைக் கொண்டிருந்த சுயேச்சைக் குழு ஒன்றும், ஐக்கிய மக்கள் சக்தியும் அணி சேர்ந்திருந்தன.

மறுபக்கத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஆறு உறுப்பினர்களும், மற்றொரு சுயேச்சைக் குழுவின் ஓர் உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் என ஒன்பது பேர் இருந்தனர்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் ரெலோ ஓர் உறுப்பினரை வைத்திருந்தது.

இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சியை ஆதரிக்கும்படி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பல தலைவர்களுடனும் தமிழரசுக் கட்சியின் சாணக்கியன், சுமந்திரன் உட்படப் பலரும் பேசிய போதிலும், ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன், வினோதராதலிங்கம், சுரேன் குருசாமி, பிரசன்னா இந்திரகுமார் போன்றோர் தமிழரசை ஆதரிக்க அல்லது வாக்கெடுப்பில் பங்குபற்றாமல் இருக்க இணங்கிய போதிலும், ரெலோவின் செயலாளர் நாயகமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தமிழரசை எதிர்த்து – தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக தனது ஒரே உறுப்பினரை வாக்களிக்கச் செய்வதில் உறுதியாக இருந்தார் எனச் சாணக்கியன் கூறுகின்றார்.

இந்தத் தவிசாளர் தெரிவு வாக்கெடுப்பை இரகசிய முறையில் நடத்துமாறு தமிழரசுக் கட்சி கேட்டபோது, அதனைத் தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மற்றும் அவர்கள் தரப்பில் உள்ள சுயேச்சை உறுப்பினர் ஆகியோரோடு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி உறுப்பினர் என ஒன்பது பேர் சேர்ந்து எதிர்த்தனர். ஆயினும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் ஒருவர் தமிழரசு அணியோடு சேர்ந்து இரகசிய வாக்களிப்பைக் கேட்டமையால் இரகசிய வாக்கெடுப்புக் கோரிக்கை 11 – 9 என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.

இரகசிய வாக்கெடுப்பில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் மேகசுந்தரம் வினோராஜ் பத்து வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தியின் கணேசநாதன் ஒன்பது வாக்குகளையும் பெற்றனர். ஒரு வாக்கு செல்லுபடியற்றதானது. தவிசாளர் தெரிவிலும் பிரதித் தவிசாளர் தெரிவிலும் அதுவே நடந்தது. இரண்டு பதவிகளையும் அதனால் தமிழரசுக் கட்சி கைப்பற்றியது.

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர், வடக்கு மாகாண காணி ஆணையாளர் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் செயலாளர்கள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கில் எதிர் மனுதாரர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேற்படி காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பான அரசின் வர்த்தமானி அறிவித்தல் கடந்த மார்ச் 28ஆம் திகதி வெளியிடப்பட்டது. இது தொடர்பில் மக்களின் கடும் எதிர்ப்பு வெளியானமையை அடுத்து இந்த வர்த்தமானியைக் கைவாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என காணி அமைச்சு கடந்த 27 ஆம் திகதி செய்திக் குறிப்பு ஒன்றின் மூலம் தகவல் வெளியிட்டிருந்தது. எனினும், இதுவரை அந்த வர்த்தமானியைக் கைவாங்குவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் மனுதாரர் சுமந்திரன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன், சட்டத்தரணிகளான விரயன், குரியா போன்றோர் முன்னிலையாகி வாதிடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# வவுனியா சிறைச்சாலைக்குள் அதிரடியாக நுழைந்த சி.ஐ.டி.

## கடமையில் ஈடுபட்ட அதிகாரிகளிடம் தீவிர விசாரணை

(கி.வசந்தன்)

வவுனியா சிறைச்சாலைக்குத் திடீரென வருகை தந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இன்று காலை சிறைச்சாலைக்குள் நுழைந்த சி.ஐ.டி. குழுவினர் வவுனியா சிறைச்சாலையைச் சோதனை செய்துள்ளதுடன், அங்கு தங்கியிருந்து கடமையில் ஈடுபட்ட அதிகாரிகளிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதேநேரம் வவுனியா சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலையில் பணியாற்றும் பத்துக்கும் மேற்பட்டவர்களை விசாரணைக்காக அனுராதபுரத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், சி.ஐ.டியினர் சிறைச்சாலைகளில் விசாரணை வேட்டையில் களமிறங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.







# சிறைச்சாலை திணைக்களத்துக்கு புதிய ஊடகப் பேச்சாளர் நியமனம்

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக ஜகத் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதி மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ.எச். அத்துல திலகரத்ன என்பவர், 2025 வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் எழுந்து வரும் சர்ச்சைகளைக் கருத்தில் கொண்டு சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளராகக் கடமையாற்றிய காமினி பி. திசாநாயக்க, சிறைச்சாலைகள் பதில் ஆணையாளரிடம் தனது இராஜிநாமாக் கடிதத்தை இன்று வியாழக்கிழமை சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக ஜகத் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கம்பஹாவில் கடவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோனஹேன பிரதேசத்தில் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடவத்தை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.



கைதுசெய்யப்பட்டவர் கோனஹேன, வேபட பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட போர 12 ரக துப்பாக்கி மற்றும் 5 தோட்டாக்கள் என்பனப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கடவத்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சந்தேகத்தால் மனைவியைத் தீ வைத்து எரித்துப் படுகொலை செய்த கணவன்!

கணவனால் தீ வைத்து எரிக்கப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மனைவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் புத்தளம் – சிலாபம், அம்பகதவில பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தாய்ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த மனைவி வர்த்தக வளாகம் ஒன்றில் பணிபுரிந்து வந்துள்ளார்.

தனது மனைவி தன்னுடன் பணிபுரியும் சக ஊழியருடன் தகாத உறவில் ஈடுபட்டிருப்பதாகக் கணவன் சந்தேகமடைந்துள்ளார்.

இதனால் மனைவிக்கும் கணவருக்கும் இடையில் தினமும் தகராறு ஏற்பட்டுள்ளது.




இந்நிலையில், கடந்த 6 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் வழமை போன்று கணவர் தனது மனைவியுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

தகராறு எல்லை மீறியதால் கோபமடைந்த கணவன் தனது மனைவியை தீ வைத்து எரித்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

படுகாயமடைந்த மனைவி பிரதேச மக்களின் உதவியுடன் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று புதன்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்த கணவன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கணவன் சிலாபம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சாவகச்சேரியில் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குகளை நாளை காலை பரிசீலனைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் இன்று தீர்மானித்தது.

சாவகச்சேரி நகர சபை அதன் நகர பிதாவைத் தெரிவு செய்வதற்காக நாளை பிற்பகலில் கூடவிருக்கையில் இந்த மனுக்களை நாளை காலை பரிசீலனைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் இன்று தீர்மானித்தது.

2025 ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின்போது சாவகச்சேரி நகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையில் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தேர்வான இருவரும் அந்தந்தச் சபை எல்லைப் பரப்புக்குள் தம்மை ஒரு வாக்காளராகப் பதிவு செய்வதற்குத் தகுதி அற்றவர்கள் என்ற அடிப்படையில் இருவரின் உறுப்புரிமைகளையும் இரத்துச் செய்யத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடக் கோரி இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மனுவைப் பரிசீலித்து உடனடியாக நடைமுறைக்கு வரக் கூடியதாக இடைக்காலத் தடை விதிக்கும் படியும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இரண்டு வழக்குகளும் இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்தபோதும் ஏனைய வழக்குகள் இருந்த காரணமாக நாளை காலை இந்த வழக்குகளைப் பரிசீலனைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் இன்று முடிவு செய்தது.

இந்த வழக்கில் மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோவும், எதிர் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரனும் முன்னிலையாகின்றனர்.




# வெருகல் படுகொலையின் 39 ஆவது நினைவேந்தல்!

**(துரைநாயகம் சஞ்சீவன்)**

ஷதிருகோணமலை, வெருகல் படுகொலையின் 39ஆவது நினைவேந்தல் நிகழ்வு வெருகல் – பூநகர் பகுதியில் இன்று வியாழக்கிழமை மிகவும் உணர்வுபூர்வமான முறையில் நினைவுகூரப்பட்டது.

வெருகல் – ஈச்சிலம்பற்று முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை ஏற்றி வந்த அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு 39 வருடங்களாகியும் நீதியும், நிவாரணங்களும் கிடைக்காத நிலையில் இந்த நினைவேந்தலைப் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

நினைவேந்தல் நிகழ்வில் முதலில் ஆத்ம சாந்தி வேண்டிய பூஜைகள் இடம்பெற்று பொதுச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உருவப் படங்களுக்கு விளக்கேற்றி மலர்தூவி ஆத்மா சாந்தி வேண்டி நினைவஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வெருகல் பிரதேச சபையின் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தவிசாளர், உதவி தவிசாளர், உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப்பொருட்களை சேருவில பகுதியில் இருந்து ஈச்சிலம்பற்று நோக்கி எடுத்து வரும்போது மகிந்தபுர பகுதியில் வைத்து மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இந்த வெருகல் படுகொலையின் 39 ஆவது நினைவுதினம் இன்றாகும்.

அன்று நாட்டில் நிலவிய யுத்த சூழல் காரணமாக வெருகல் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஈச்சிலம்பற்று, பூமரத்தடிச்சேனை மற்றும் மாவடிச்சேனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்தார்கள். இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்களை அரசு சேருவில பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக வழங்கி வந்தது.

இந்நிலையில் 1986 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி அகதிகளுக்கான நிவாரணங்களை வண்டில்களைக் கொண்டுவந்து ஏற்றிச் செல்லுமாறு அப்போது மாவட்ட அரச அதிபராக இருந்த வர்ணசூரியவால் மக்களுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் முகாம்களுக்கு பொறுப்பான அரச அதிகாரிகள் மூவர் உட்பட 23 பேர் மாட்டு வண்டில்களுடன் சேருவில நோக்கிச் சென்றார்கள்.

அங்கிருந்து நிவாரணப் பொருள்

தொடர்ச்சி▼








# வெருகல் படுகொலையின் 39 ஆவது நினைவேந்தல்!

தொடர்ச்சி▲

களை ஏற்றிக்கொண்டு ஈச்சிலம்பற்று நோக்கி வரும்போது மகிந்தபுரவில் வைத்து ஆயுதம் தாங்கிய நபர்களினால் இவர்கள் வழிமறிக்கப்பட்டு பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம் அழைத்துச் செல்லப்பட்டு முழங்காலில் இருக்க வைத்து பின்னர் வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

இதில் மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21 பேர் படுகொலை செய்யப்பட்ட தோடு இருவர் படுகாயங்களுக்கு உள் ளாகிய நிலையில் உயிர் தப்பியிருந்தார் கள். படுகொலை செய்யப்பட்டவர்களில் இருவர் முஸ்லிம் சகோதரர்களாவர்.

இந்தப் படுகொலைச் சம்பவத்தில் பின்வரும் நபர்கள் படுகொலை செய் யப்பட்டிருந்தார்கள்.

1. அண்ணாமலை தங்கராஜா – கிராம சேவகர் (தம்பலகாமம்) – ஈச்சி லம்பற்று முகாம்

2. அலிபுகான் – கிராம சேவகர் (தோப்பூர்) – பூமரத்தடிச்சேனை முகாம்

3. அயாசு முகம்மது அப்துல் லத்தீப் – (பாலத்தோப்பூர்) – மீள்குடியேற்ற உத்தியோகத்தர் – பூநகர் முகாம்

4. கோணாமலை வேலாயுதம் – பூமரத்தடிச்சேனை

5. கதிர்காமத்தம்பி –விநாயகமூர்த்தி – பூமரத்தடிச்சேனை

6. தெய்வேந்திரம் நவரெட்ணம் பூமரத்தடிச்சேனை

7. தம்பிராசா நவரெட்ணம் பூநகர்

8.கனகசபை கனகசுந்தரம் – பூநகர்

9. கதிர்காமத்தம்பி செல்லத்தம்பி – பூநகர்

10. மூத்ததம்பி காசிப்பிள்ளை – பூநகர்

11. கதிர்காமத்தம்பி நாகராசா – பூநகர்

12. வீரபத்திரன் நடேசபிள்ளை – பூநகர்

13. முத்தையா காளிராசா – பூநகர்

14. முத்துக்குமார் வேலுப்பிள்ளை – பூநகர்

15. வைரமுத்து சித்திரவேல் – விநாயகபுரம், ஈச்சிலம்பற்று

16. சித்திரவேல் சிவலிங்கம் – விநாயகபுரம், ஈச்சிலம்பற்று

17. வீரபத்திரன் சோமசுந்தரம் – விநாயகபுரம், ஈச்சிலம்பற்று

18. சித்திரவேல் தம்பாப்பிள்ளை – விநாயகபுரம், ஈச்சிலம்பற்று

19. நல்லையா பரமேஸ்வரன் இலங்கைத்துறை முகத்துவாரம்

20. தாமோதரப்பிள்ளை தங்கராசா – ஈச்சிலம்பற்று

21. புண்ணியம் மதிவதனன் – பூமரத்தடிச்சேனை

அத்துடன் வீரபத்திரன் சோமசுந்த ரன், வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் தப்பியிருந்தார்கள்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஒரே குட்டையில் ஊறியவை!

கூறியது ஒன்று, ஆனால் செய்வதோ வேறொன்று என இந்த அரசாங்கத்தின் செயற்போக்குக்கு எதிரான குற்றச்சாட்டுக்களின் பட்டியல் நீளுகின்றது.

பொருளாதாரத் துறையில் இருந்து ஒவ்வொரு விடயத்திலும் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வரமுன்னர் கூறிய விடயங்களும், கொள்கைகளும் வேறு. ஆனால் இப்போது அதிகாரத்துக்கு வந்த பின்னர் நடைமுறையில் பின்பற்றப்படும் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் வேறு. அது மட்டுமல்ல அவை ஒன்றுக்கொன்று முரணானவையும் கூட.

முன்னைய ஆட்சியாளர்கள் வெளிநாடுகளில் தூதரக மட்டங்களில் நியமனங்களை முறையாக இராஜதந்திர சேவையில் இருப்போருக்கு வழங்குவதை விடுத்து, தங்களுக்கு வேண்டியவர்கள், நெருக்கமானவர்களுக்கு அரசியல் நியமனங்களாக வழங்கி வந்தார்கள். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அத்தகைய அரசியல் நியமனங்களை எல்லாம் அடியோடு ஒதுக்கிவிட்டு, இராஜதந்திர சேவையில் இருப்போரை முறைப்படி அப்பதவிகளுக்கு நியமிப்போம் என்றார்கள்.

பதவிக்கு வந்ததும் அவ்வாறு அரசியல் ரீதியாக நியமனம் பெற்ற 16 இலங்கைத் தூதரகங்களின் தலைவர்களையும் நாட்டுக்கு திரும்பும்படி கடந்த டிசம்பரில் உத்தரவிட்டது புதிய அரசு.

அந்த 16 தூதரகங்களில் எட்டு தூதரகங்களுக்கு மட்டுமே தலைவர்களை நியமித்தது தற்போதைய அரசு. அந்த எட்டில் ஏழு நியமனங்கள் ராஜதந்திர சேவையிலிருந்து வந்தவர்கள் அல்லர். அவையும் இந்த அரசின் அரசியல் நியமனங்கள்தான்.

'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதையாக இராஜதந்திர சேவையில் அரசியல் நியமனங்களை இந்த அரசும் தொடர்ந்து முன்னெடுக்கிறது.

முன்னைய அரசுகளைக் குறை சொன்ன தேசிய மக்கள் சக்தி, இப்போது தானும் அந்த வேலையையே செய்கின்றது. அது மாத்திரமல்ல கடந்த ஆறு மாதங்களுக்கு மேல் எட்டு முக்கிய தூதரகங்கள் தூதர்கள் இல்லாமல் - தலை(வர்கள்) இல்லாமல் இயங்கும் அவல நிலைமை வேறு.

இப்போது பிரிட்டன், ஜப்பான், தென்னாபிரிக்கா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற முக்கிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு தூதுவர்களாக அரசியல் நியமனங்களை செய்துள்ளது அரசாங்கம். சேவைக்கு வெளியே இருந்து நியமனங்கள் செய்யப்பட்ட மற்ற இரண்டு நாடுகள் கியூபா மற்றும் பாகிஸ்தான் ஆகும். முன்னாள் தலைமை நீதிபதி ஜெயந்த ஜெயசூர்யா நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த கால அரசாங்கங்கள் இராஜதந்திரப் பதவிகளுக்கு விருப்பப்படி அரசியல் நியமனங்களைச் செய்தன. மேலும் பெரும்பாலான நேரங்களில் அரசியல்வாதிகளின் உறவினர்கள் - மகன்கள், மகள்கள், மருமகள்கள் மற்றும் உடன்பிறந்தவர்கள் - தேர்ந்தெடுக்கப்பட்டனர். இருப்பினும், புதிய அரசாங்கம் ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் உறவினர்களை இராஜதந்திர பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கவில்லை என்பது ஆறுதலான விடயம்.

வெளியுறவு சேவையை அரசியல்மயமாக்கியமைக்காக முந்தைய அரசாங்கங்களை கடுமையாக விமர்சித்தது தேசிய மக்கள் சக்தி. இலங்கையின் வெளியுறவு சேவை அரசியல்மயமாக்கப்பட மாட்டாது என்று தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதியளித்த தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வந்த பின்னர் தனது சொல்லாடலுக்கு முற்றிலும் மாறாகவே செயற்படுகின்றது. இந்த விடயத்தைப் பொறுத்தவரை முன்னைய அரசுகளுடன் ஒப்பிடுகையில் இந்த அரசும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைதான் என்று நிரூபித்தே வருகின்றது.



# மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்!

**(அபு அலா, மட்டு. துஷாரா, த.ஜெபி ஜனார்த்)**

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தலைமையில் நேற்று (11) பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி முரளிதரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கந்தசாமி பிரபு, எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், ஞானமுத்து ஸ்ரீநேசன், இராசமாணிக்கம் சாணக்கியன், இளையதம்பி ஸ்ரீநாத் ஆகியோரது பங்கேற்றனர்.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வு செய்யப்பட்டது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள், விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல், வீதிகள் மற்றும் பாலங்கள் அமைத்தல், யானை வேலி அமைத்தல், உரம் வழங்கல், அரச மருந்தகம் அமைத்தல், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இடப்பற்றாக்குறை, காணிப் பிரச்சினைகள், மேய்ச்சல்தரை பிரச்சினை, குடிதண்ணீர் வழங்கல் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகள் பற்றியும் திணைக்களங்கள் சார் விடயங்கள் பற்றியும் ஆராயப்பட்டது. அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கும் பணிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர்,

மிக முக்கியமாகக் காணப்படும் மக்கள் நலப்பணிகளை தெரிவு செய்து துரிதகதியில் அவற்றை நிறைவு செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரீ.ஏ.சி.என்.தலங்கம, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர்களான திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், திருமதி நவரூபரஞ்ஜினி முகுந்தன் (காணி), மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் வீ.நவநீதன், உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள், மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், முப்படை உயர் அதிகாரிகள் மாகாண திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் திணைக்களங்கள் சார் உயரதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

விவசாயக்குழு, கைத்தொழில் குழு, போக்குவரத்துக்குழு, சுற்றாடல் குழு ஆகியன நான்கு குழுக்களும் மாதாந்தம் கலந்துரையாடி அவற்றுக்கான தீர்வுகள் காணப்பட வேண்டும் என்பதுடன் குறித்த கூட்டறிக்கைகள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுகூட்டத்தில்சமர்ப்பிக்க வேண்டும்எனவும்தீர்மானிக்கப்பட்டது.







# மாணவர்களின் புத்தாக்கத் திறனை மேம்படுத்துவதற்குச் செயற்றிட்டங்கள்

மாணவர்களின் Robotic Technology மற்றும் புத்தாக்கத் திறனை விருத்தி செய்வதற்கு Arduino Kit வழங்கி வைக்கப்பட்டது.

கிளிநொச்சி வடக்கு வலயத்துக்கு உட்பட்ட மாணவர்களின் புத்தாக்கத் திறனை விருத்தி செய்வதற்கும் Robotic Technology, IOT பயிற்சிகளை வழங்கும் நோக்குடனும் புத்தாக்கப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் தொகையை அதிகரிப்பதற்காகவும் ஐவு துறையில் அந்த மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கும் முகமாகவும் Ratnam Foundation (UK) அமைப்பினரின் நிதிப்பங்களிப்புடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் கிளிநொச்சி வடக்கு வலயப் பாடசாலைககளுக்கு 26 Arduino முவை கிளிநொச்சி வடக்கு வலயக் கல்வி அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் Yarl IT HUB நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளரின் உதவியுடன் அந்த நிறுவனத்தின் IOT வளவாளரால் கிளிநொச்சி வடக்கு வலயப் பாடசாலைகளில் ICT பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான Robotic Technology, IOT தொடர்பான திறன் விருத்திச் செயலமர்வும் நடத்தப்பட்டது.

அத்துடன் கிளிநொச்சி வடக்கு வலயக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. சு. ராதிகா பாடசாலைகளுக்கு Arduino Kit வழங்கி வைத்த Ratnam Foundation (UK) அமைப்பினருக்கு நன்றி தெரிவித்தார்.



# குந்தவை கதைகள் நூல் வெளியீட்டு விழா!

காங்கேசன்துறையைச் சேர்ந்த எழுத்தாளர் இராஜரட்னம் சடாச்சரதேவி எழுதிய குந்தவை கதைகள் நூல் வெளியீட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை உடுவில் அரவிந்தன் தலைமையில், சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து, சமய, சமூ சேவையாளர் வீ. ஆர். தொண்டமநாபன் நூலாசிரியரிடம் இருந்து முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில், அ.யேசுராசா, இ. இராஜேஸ் கண்ணன், சி.ரமேஷ், ஸ்ரீலேக்கா பேரின்பகுமார், எஸ். குணேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர்.







# வடக்கில் நடைமுறையாகும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்ற ஆராய்வு!

வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை (11) நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

காலநிலை மாற்றம் காரணமாக மழை எப்போது கிடைக்கும் என்பதை எதிர்வுகூற முடியாத நிலைமை இருக்கின்றது. எனவே திட்டங்களை எவ்வளவு விரைவாக செய்து முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக செய்து முடிக்க



வேண்டும்.

இந்தமுறை கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியின் 3 மடங்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உரிய வகையில் அதைச் செலவு செய்யவேண்டும். அடையாளப்படுத்தப்பட்டுள்ள திட்டங்களை உரிய காலத்தில் செயற்படுத்தி முடிக்கவேண்டும். அடுத்த மாதத்தில் இருந்து நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்கள் அதிகளவாக இருக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், நீச்பாசனத் திணைக்களம் என்று ஒவ்வொரு திணைக்களத்தினதும் முன்னேற்றங்கள் தனித்தனியாகவும் விரிவாகவும் ஆராயப்பட்டன. ஒவ்வொரு திட்டங்களதும் முன்னேற்றம், இடர்பாடுகள் தொடர்பில் ஆளுநரால் தனித்தனியாகக் கவனம் செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் (நிதி), திட்டமிடல், நிர்வாகம், பொறியியல் விவசாய அமைச்சின் பதில் செயலாளர், விவசாயத் திணைக்களப் பணிப்பாளர், நீர்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், கால்நடை அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் தொடர்புடைய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.





குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# விசேட தேவையுடையவர்களை வலுப்படுத்துதல் தொடர்பில் மாவட்ட சுய உதவி கூட்டத்தில் ஆராய்வு

(அபு அலா )

பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களை வலுப்படுத்த அரசு சாரா நிறுவனங்களின் உதவியைப் பெறுவதன் மூலமும், அவர்களின் தரவுகளைப் புதுப்பித்துக்கொள்வதன் மூலமும் எதிர்காலத்தில் விசேட தேவையுடையவர்களை வலுப்படுத்துவது மிக எளிதாக இருக்கும் என்று திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன் தெரிவித்தார்.



திருகோணமலை மாவட்ட சுய உதவிக்குழுக் கூட்டம் நேற்று (11) மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டின் 2 ஆம் காலாண்டுக்கான மாவட்ட சுய உதவிக் குழு கூட்டத்தில் தம்பலகாமம், மூதூர், கிண்ணியா, பட்டிணமும் சூழலும், வெருகல், கோமரன்கடவல, குச்சவெளி, சேருவில, மொறெவெவ மற்றும் கந்தளாய் ஆகிய சுய உதவிக் குழுக்கள் இதில் பங்கேற்று தங்களின் கருத்துக்களையும் முன்வைத்தன.

கடந்த 2024 ஆம் ஆண்டு சமூக சேவைகள் திணைக்களத்தால் சுய உதவிக் குழுக்களுக்கிடையே நடத்தப்பட்ட சுப அபிமானி போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கான சான்றிதழ்களை மேலதிக மாவட்ட அரச அதிபர் எஸ். சுதாகரன் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் இணைப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் இருந்து மீளத் திரும்பிய ஆறு பேருக்குக் கொடுப்பனவு வழங்கல்



இந்தியாவில் இருந்து மீளத் திரும்பியவர்களின் சுமூகமான மீள் ஒருங்கிணைப்புக்கான உதவித் தொகையானது யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபனால் நேற்று புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மேலதிக செயலர் (காணி) க.ஸ்ரீமோகனன், முகநுசுசு (Ceylon) இணைப்பாளர் இ. பிரபாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் முகநுசுசு (Ceylon) நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு அந்த நிறுவனத்தால் இதற்கான உதவித் தொகை தலா 90 ஆயிரம் ரூபா வீதம் வேலணை மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் மீளத் திரும்பிய ஆறு பேருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கதிர்காம பாதயாத்திரையினருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவி

சைவமரபு – பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரை தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி 42 நாள்கள் கடந்த நிலையில் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் தாமரைக்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள ஷீரடி சாய் கருணாலயத்தைச் சென்றடைந்துள்ளது.

இவர்களுக்கு ஒரு தொகுதி பிஸ்கற் வகைகள், தண்ணீர் போத்தல்கள் மற்றும் ஒருதொகுதி நிதி என்பனவற்றை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று 06 ஆம் கட்டமாக வழங்கிஙர்.

இந்த உதவித் திட்டம் நேற்று புதன் கிழமை வழங்கப்பட்டது.



# புங்குடுதீவு தெற்கு கடற்கரையோரங்களில் பிளாஸ்ரிக், பொலித்தீன் மூலப்பொருள்கள்

## கடற்றொழிலாளர்களை விழிப்புடன் இருக்க அறிவுறுத்து

யாழ்ப்பாண மாவட்டத்தின் புங்குடுதீவு தெற்கு கடற்கரையோர பகுதி, குறிகட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு கடற்கரையோரப் பகுதிகளில் தற்போது பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்கான மூலப்பொருள் பெருமளவில் கரையொதுங்கி வருகிறது. கடற்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட கடற் சூழல் உத்தியோகத்தர்களால் இது அடையாளம் காணப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட பொருள்கள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்கான பிரதான மூலப்பொருளாகும். இது சூழலுக்கும் மனிதனுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியன.

அந்தவகையில் பொது மக்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் விழிப்புணர்வுடன் நடந்துகொள்வதுடன் இந்தப் பொருள்களைத் தொடுதல் மற்றும் எடுத்துச்செல்லுதலை தவிர்க்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கடற்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் உதவி முகாமையாளருக்கு அறிக்கையிடப் பட்டுள்ளது.

இதனை அப்புறப்படுத்தல் தொடர்பாக உரிய பொறிமுறை எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கப்படும் என்று மாவட்ட செயலர் தெரிவித்துள்ளார்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் அம்பாறையில் உதவித் திட்டம்

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் விநாயகபுரம் பிரதேசத்தில் அமைந்துள்ள பொருளாதாரத்தால் பாதிக்கப் பட்ட குடும்பம் ஒன்றுக்கு வீட்டின் கூரையைச் சீர்செய்வதற்காகத் தகரங்களை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

இந்த உதவித் திட்டம் நேற்று (11) புதன்கிழமை இடம் பெற்றது.








# பாரிஸில் மூத்த பத்திரிகையாளர் காசிலிங்கத்துக்கு அமுதவிழா!



ஈழத்திலும் ஐரோப்பாவிலும் நீண்ட காலம் பத்திரிகைத் துறையில் பணி புரிந்த, மூத்த பத்திரிகையாளர் ஈழநாடு எஸ். கே. காசிலிங்கத்தின் அமுதவிழா பாரிஸ் மாநகரில் கடந்த நடைபெற்றது.

பிரான்ஸ் நாட்டில் வாழும் மூத்த எழுத்தாளர் வி. ரி. இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், கலைஇலக்கியப் பத்திரிகைத் துறையினர், சமூக நிறுவனங்களின் பிரிதிநிதிகள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.

பிரித்தானியா, சுவிஸ், ஜேர்மனி, கனடா ஆகிய நாடுகளிலிருந்தும் விழா நாயகனின் உறவினர்கள், நண்பர்கள் வருகைதந்தனர்.

சுவிஸ் – லவ்சான் நகர சபையின் மூத்த உறுப்பினரும், 'குத்துவிளக்கு' திரைப்பட நாயகனுமான தம்பிப்பிள்ளை நமசிவாயம், மொழிபெயர்ப்பாளர் நிஷா பீரிஸ், எழுத்தாளர் முகுந்தன், நாடக நேசர் எம். அரியநாயகம், மனித உரிமைச் செயற்பாட்டாளர் ச. வி. கிருபாகரன், பத்திரிகையாளர் என். கே. துரைசிங்கம், எஸ். சஸ்பாநிதி, நடிகர் கே. பி. லோகதாஸ், 'தமிழாலயம்' சி. பாலச்சந்திரன், செ. ஸ்ரீபாஸ்கரன், மஞ்சுளா சுந்தரலிங்கம் ஆகியோர் உட்படப் பல சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் வாழ்த்துரைகளை வழங்கினர்.

வெளிநாடுகளிலிருந்து பத்திரிகைத் துறை நண்பர்கள் பலர் காணொளி மூலம் வழங்கிய வாழ்த்துரைகளும் காண்பிக்கப்பட்டது.

கலை, இலக்கிய, பத்திரிகைத் துறையினர், நண்பர்கள் வழங்கிய கட்டுரைகள், படங்கள் அடங்கிய, அதிக பக்கங்கள் கொண்ட, அழகிய அமுதவிழா மலரும் வெளியிடப்பட்டது.

அமுதவிழா மலரை விழாத் தலைவர் வி. ரி. இளங்கோவன் வெளியிடச் சிறப்புப் பிரதிகளை த. நமசிவாயம், இரா. சிறிதரன், சி. பாலச்சந்திரன், இரா. குணபாலன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

கவியரங்கம், வயலின் கச்சேரி, நடன நிகழ்ச்சி ஆகியனவும் விழாவில் இடம்பெற்றன. இவ்விழாவை ஊடகவியலாளர் எஸ். கே. ராஜென் தொகுத்து வழங்கினார்.

# கிழக்கின் கவிக்கோ நூல் தொகுப்பு அறிமுகம்!





(எம்.எப்.நவாஸ்)

கிழக்கு மாகாண பன்பாட்டலுல்கள் திணைக்களத்தின் "கிழக்கின் கவிக்கோ" நூல் தொகுப்பு அறிமுக நிகழ்வு கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் நல்லதம்பி கேட்போர் கூடத்தில் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கல்வி உயர் கல்வி மேலதிக செயலாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் மற்றும் கௌரவ அதிதியாக பிரதேச செயலாளர் ரி.கெ. அதிசயராஜ் மற்றும் ஆர்.இளங்குமுதன் ஆகியோரும் சிறப்பு அதிதியாக உமா வரதராஜன், கவிஞர் சோலைக்கிளி, மொழித்துறை விரிவுரையாளர் ஜனாப் அப்துல் றசாக், கலாச்சார உத்தியோகத்தர்களான ஏ.எல். தௌபீக், எம்.எஸ்.ஜௌபர் ஆகி யோரும் கலந்து கொண்டனர்.



# பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு ஆளுநர் பணிப்பு



பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையை ஓரிரு நாள்கள் மாத்திரம் முன்னெடுக்க முடியாது. தொடர்ச்சியாக சகல திணைக்களங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். மக்களுக்கு போதியளவு விழிப்புணர்வை ஏற்படுத்திய பின்னர் சட்டநடவடிக்கையை தீவிரமாக முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணித்துள்ளார். இந்த வேலைத்திட்டத்தை உடனேயே ஆரம்பிக்குமாறும் அறிவுறுத்தினார்.

பார்த்தீனியத்தை முற்றாக ஒழிக்கும் செயற்றிட்டம் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை (11) நடைபெற்றது.

ஆளுநர் தனது ஆரம்ப உரையில், அலுவலர்களை களத்துக்குச் சென்று பணியாற்றுமாறு திரும்பத் திரும்பக் கூறிவருகின்றபோதும் அலுவலகத்திலிருந்தே திட்டங்களை தயாரிக்கின்றனர். அதேபோல ஒரு விடயத்தைக் குறிப்பிட்டால் அதன் முன்னேற்றத்தை தொடர்ந்து கவனிக்கும் இல்லை. அரசின் ஊடாக எமது மக்களுக்கான அபிவிருத்திகளைச் செய்வதற்கு சாதகமான சூழல் இருக்கின்றது. அதைப் பயன்படுத்தி மக்களுக்கு எதையாவது பெற்றுக்கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

பெரும்பாலான வீதிகளின் ஓரங்களில் பாதீனியம் செடி காணப்படுகின்றது. பாதீனியத்தை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் விரைவாக அதைச் செயற்படுத்த வேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

பிரதம செயலாளர், இது தொடர்பான சட்ட ஏற்பாடுகளைக் குறிப்பிட்டார். அதற்கு அமைவாக வழிகாட்டுதல் குழு அமைக்கப்பட வேண்டும் எனவும், அதனுடன் தொடர்புடைய 12 திணைக்களங்களையும் இதில் இணைத்துக் கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்தார். அத்துடன் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு உரிய அலுவலர்களுக்கான அடையாள அட்டையையும் விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளரால் பாதீனியம் ஒழிப்புக்கு உரிய நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் அதைத் துரிதமாக நடைமுறைப்படுத்தச் சகலரும் ஒத்துழைக்கவேண்டும் எனவும் கோரினார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், ஒவ்வொரு அரச திணைக்களங்களும் தமக்கு உரிய இடங்களில் பாதீனிய ஒழிப்பை முதலில் முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், டெங்கு கட்டுப்பாட்டு வாரம் போன்று இதற்கும் ஒரு வாரத்தைச் செயற்படுத்தலாம் என யோசனை முன்வைத்தார். இதன்போது ஆளுநர், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை இவ்வாறு ஒரு வாரத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் அந்த வாரத்தில் மாத்திரம் நடவடிக்கை எடுக்காமல் தொடர்ச்சியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்போது நிச்சயம் பாதுகாப்பான கையுறை மற்றும் முகக் கவசம் அணிந்து கொள்ள வேண்டும் என்று யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் சூம் ஊடாக இணைந்து கொண்ட மாவட்டச் செயலர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

மன்னார் மாவட்டச் செயலர், மன்னார் மாவட்டத்தில் 4 இடங்கள் பாதீனியம் அதிகமாக உள்ள இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவற்றில் ஒழிப்பு நடவடிக்கையை துரிதமாக ஆரம்பிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அதேபோல கிளிநொச்சி மாவட்டச் செயலர், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் வீதியோரங்களிலேயே அதிகளவு காணப்படுகின்றன என்றும் சம்பந்தப்பட்ட வீதிக்கு உரிய திணைக்களம் ஊடாக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். அதேபோல பொது மக்களுக்கு உரிய தனியார் காணிகளில் கிராம அலுவலர்கள் ஊடாக அறிவுறுத்தல் வழங்கி நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலர்களும் தமது பிரதேசங்களில் பாதீனியம் அதிகமாக உள்ள இடங்கள் அடையாளப்படுத்தி நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

அனைத்து மாவட்டச் செயலர்களும் சட்டநடவடிக்கை எடுப்பதன் ஊடாகவே இதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் எனக் குறிப்பிட்டனர். இதனை ஏற்றுக்கொண்ட ஆளுநர், சட்டநடவடிக்கைக்கு முன்னர் மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கி அதன் பின்னர் சட்ட நடவடிக்கையை ஆரம்பிப்போம் என்று குறிப்பிட்டார்.

இதன்போது விவசாயத் திணைக்களத்தால் கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விவரிக்கப்பட்டது. மக்களின் காணிகளில் பாதீனியம் காணப்படுமாக இருந்தால் வெள்ளை அறிவித்தல் தொடர்ந்து மஞ்சள் அறிவித்தல் இறுதியாக சிவப்பு அறிவித்தல் காட்சிப்படுத்தியே சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டனர். களைநாசினிகள் ஊடாகப் பாதீனியத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அதனைப் பயன்படுத்துவதால் மண் வளம், நிலத்தடி நீர்ப்பாதிப்பு உள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

கைவிடப்பட்ட தனியார் காணிகளில் பிரதேச சபையின் ஊடாக பாதீனியத்தை அகற்றுவது என்றும் அதற்கு உரிய கட்டணத்தை சோலைவரியுடன் இணைந்து அறவிடமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையை கடந்த காலங்களைப் போன்று குறிப்பிட்ட காலப் பகுதிக்கு மாத்திரம் முன்னெடுக்காமல் தொடர்ந்து 4 – 5 வருடங்களுக்கு முன்னெடுக்க வேண்டும் என அறிவுறுத்திய ஆளுநர், பொது மக்களுக்கு தெரியப்படுத்தி அவர்களின் காணிகளில் உள்ள பாதீனியத்தை ஒழிப்பது, அரச திணைக்களங்கள் தமக்கு உரிய ஆதனங்களில் பாதீனியத்தை ஒழிப்பது என அனைத்தும் சமநேரத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மாவட்டச் செயலர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் தமது பிரதேச மற்றும் மாவட்ட மட்டக் கூட்டங்களில் கலந்துரையாடித் தொடர் நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும் எனவும், பிரதம செயலாளர் மாதாந்தம் முன்னேற்றத்தை ஆராய வேண்டும் என்றும் ஆளுநர் வலியுறுத்தினார்.





## உலகையே உலுக்கிய செம்மணி படுகொலை:

# மீளத் தோண்டப்படும் தமிழர்களின் புதைகுழி!

- நவீனன்.

மூன்றுக்கு மேற்பட்ட மனித உடல்கள் ஒரு இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த இடத்தை “மனிதப்புதைகுழி” எனப் பிரகடனப்படுத்த முடியும் என்று சர்வதேச சட்டம் பொருள்பட கூறுகின்றது. ஆயினும் சிங்கள ஆட்சியில் மூடி மறைக்கப்பட்ட பல மனிதப் புதைகுழிகள் வெளி உலகுக்கு ஒருபோதும் தெரியவரவில்லை.

### உலகையே உலுக்கிய செம்மணி

1996 செப்ரெம்பர் ஏழாம் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி, இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டதால் உயிரிழந்தார். கிருசாந்தியைத் தேடி இராணுவ முகாமுக்குச் சென்ற தாயாரான திருமதி இராசம்மா, சகோதரர் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரும் இராணுவத்தினரால் படுகொலை செய்து புதைக்கப்பட்டனர்.

செம்மணியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு பொலிஸுக்கும் கண் துடைப்புக்காக அரசால் தண்டனை வழங்கப்பட்டது. இன்னமும் பல கொலையாளவர்களின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதால் தற்போது மீளவும் செம்மணி புதைகுழி தோண்டப்படுகிறது.

### புதைகுழியும் இனப்படுகொலையும்

02.05.2025 அன்று செம்மணியில் மேற்கொண்ட அகழ்வின் போது பல மனித மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. சட்டப்படி செம்மணியை மனித புதைகுழியாக பிரகடனப்படுத்த முடியும்.

இந்த செம்மணியில் புதைக்கப்பட்டவர்கள் அனைவரும் தமிழர்கள். அவர்களைக் கொலை செய்து புதைத்தவர்கள் அரச படையினர். இந்த மகா பாதக செயலைச் செய்தவர்கள் எப்படி இலங்கையில் சுதந்திரமாக நடமாட முடியும்? இந்த கொலைகாரரை கண்டுபிடித்து அதிகபட்ச தண்டனை வழங்க முடியவில்லை



என்பது இலங்கை அரசின் இனவாத போக்கை வெளிக்காட்டுகிறது.

செம்மணி , வீரமுனை , கொக்கட்டிச்சோலை, முள்ளிவாய்க்கால் என தமிழர்களைக் கொன்று குவித்த வரலாறு இன்னும் பல உண்டு.

இலங்கை அரச படைகளால் தமிழர்கள் கொன்று புதைத்தது அவமானகாரமான, அசிங்கமான, அக்கிரமான, கொடூரமான வரலாறு உலகின் பார்வைக்கு இன்னமும் வெளிப்படவில்லை.

### அதிகாரமும் அவமானமும்

ஜே. ஆர் . ஜெயவர்த்தன காலம் தொடங்கி, பிரேமதாஸா போன்றவர்கள் அறுபது ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களைக் கொலை செய்துவிட்டு நிறைவேற்று அதிகாரத்துக்குள் ஓடி ஒழித்துக் கொண்டனர்.

பின்னர் சந்திரிக்கா குமாரதுங்கா யாழ்ப்பாணத்தில் அப்பாவி தமிழ் மக்கள் பலரைக் கொலை செய்து செம்மணியில் புதைத்துவிட்டு அவரும் நிறைவேற்று அதிகார போர்வைக்குள் புகுந்து ஒழித்துக்கொண்டார்.

இறுதியில் ராஜபக்ஷாக்கள் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களை சிறுவர்கள் , பெண்கள் , முதியவர்கள் என்று பாகுபாடு இன்றி முள்ளிவாய்க்காலில் வைத்து கொன்று குவித்து விட்டு நிறைவேற்று அதிகாரத்தையும்,

தொடர்ச்சி▼




# மீளத் தோண்டப்படும் தமிழர்களின் புதைகுழி!

**தொடர்ச்சி▲**

தேசிய வீரர்கள் எனவும் தேசிய வெற்றி எனவும் மூன்று அடுக்கு பாதுகாப்புக்குள் பதுங்கிக் கொண்டனர் என்பது ஸ்ரீலங்காவின் அவமானகரமான வரலாறாகும்.

**சமாதானத்துக்கான போர்**

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா 1994 இல் புதிதாக ஆட்சியைப் பொறுப்பேற்ற பின், அவர் தலைமையிலான அரசு மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்காக காணாமல் போனவர்கள் புதைக் கப்பட்ட சூரியகந்த புதைகுழிகள் போன்ற பல புதைகுழி களை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியதோடு குற்றவாளி களைச் சட்டத்தின் முன் நிறுத்தியதாக காட்டிக்கொண்டது.

ஆயினும் “சமாதானத்திற்கான போர்” என்னும் பெயரில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் 1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தொன்பதாம் திகதி புலிகளுக் கும் அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து போர் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டன. 1995 இன் இறுதிகளில் யாழ். நகரையும், 1996 இன் நடுப் பகுதிகளில் யாழ். குடாநாடு முழுவதையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

“சமாதானத்துக்கான போர்” மூலம் இராணுவத்தினர் யாழ். குடாநாட்டை 1996 இல் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர் யாழ். நகரத்திலிருந்த இராணுவத்தினருக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஜானகப் பேரேரா இருந்தபோது குடாநாட்டில் கைதாவோர், காணாமல் போவோர் பட்டியல் நாள்தோறும் அதிகரித்துச் சென்றதுடன், பெண்கள் மீதான துன்புறுத்தல்களும் மக்கள் உயிரிழப்புகளும் அதிகரித்தன.

1996ஆம் ஆண்டு நடுப் பகுதிக்குப் பின்னர் யாழ். குடா முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் இராணுவத் தினர் கொண்டுவந்தனர். இதன் பின் நடந்த கொடூர நிகழ்வுகளால் யாழ். குடாநாடே அதிர்ச்சியில் உறைந்தது.

**ராஜபக்ஷவின் சாட்சியம்**

1996 நடுப் பகுதிக்குப் பின்னான ஆறு மாதக் காலப் பகுதியில் காணாமல் போனோர் பட்டியல் எழுநூ றுக்கு மேல் அதிகரித்தது. செம்மணி படுகொலை தொடர்பான சாட்சியங்கள் பல பதிவாகின.

செம்மணியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப் பட்டு உயிரிழந்தது தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு பொலிஸுக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்டவர்களில் “லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ஷ” விசாரணையின்போது கீழ்வருமாறு வாக்குமூலம் அளித்தார்.

“யாழ். குடாநாட்டில் பரவலாகக் கைதுசெய்து காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

இவர்களின் சடலங்கள் மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் இரவில் எடுத்துச் செல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்படுவதுண்டு. முந்நூறு, நானூ று பேரைப் புதைத்த புதைகுழிகளை என்னால் காண்பிக்க முடியும் என்றார்.

இதன்பின்னர் 1999ஆம் ஆண்டில் “லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச” வினால் செம்மணியில் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் புதைகுழிகளைத் தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது.


நீண்ட காலத்தின் பின்னர் மீளவும் செம்மணி புதைகுழிகள் தோண்டப்பட்டாலும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை எவருக்கும் இல்லை. காலம் பல கடந்தும் இன்றுவரை செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக எந்தவித மான இறுதி முடிவையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மேற்கொள்ளவில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும்.

**புதைகுழிக்கு நீதிகோரி போராட்டம்**

செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி கவனவீர்ப்பு போராட்டம் யாழில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை தாங்கி “செம்மணி புதை குழிக்கு நீதி வேண்டும், மறைக்காதே மறைக்காதே புதை குழிகளை மறைக்காதே, எங்கே எங்கே உறவுகள் எங்கே, இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும்” என கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இது சர்வதேசத்தின் காதுகளில் ஒலிக்கட்டும்.






# 242 பேருடன் இன்று பயணித்த ஏர் இந்திய விமானம் விபத்து!

## குஜராத்தில் பெரும் துயரம்

இந்தியாவின் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் விமான நிலையம் அருகே விமானம் ஒன்று 242 பயணிகளுடன் விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அகமதாபாத் - மேகனி நகரில் விமானம் விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. விமான விபத்தை தொடர்ந்து விமான நிலையம் அருகே கரும்புகை வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், அகமதாபாத்திலிருந்து லண்டனை நோக்கி பயணித்த போயிங் 787-8 விமானத்தில் 242 பயணிகளுடன் விபத்துக்குள்ளானமை தொடர்பில் Air India விமானப் போக்குவரத்து நிறுவனத்தால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி விமாத்தில் 242 பயணிகள் சென்ற நிலையில் அதில் பயணித்த பயணிகள் தொடர்பில் முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

விபத்தின் போது விமானத்தில், 169 இந்தியர்களும், 53 பேர் பிரித்தானிய நாட்டவர்களும், 1 கனடா நாட்டவரும் மற்றும் 7 பேர் போர்த்துக்கள் நாட்டவர்களும் இருந்தனர் என கூறப்பட்டுள்ளது.

7 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை, விபத்துக்குள்ளான ஏர் இந்தியா விமானத்தில் பயணித்தவர்களில் குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் ஒருவர் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.













# தமிழகத்தில் கண்டறியப்பட்டது வீரியமற்ற ஒமைக்ரான் தொற்று

## சுகாதாரத்துறை அமைச்சர் தகவல்



தமிழகத்தில் கண்டறியப்பட்டது வீரியமற்ற ஒமைக்ரான் வகை கொரோனாத் தொற்று எனவும் எனவே, பெரிய அளவில் பாதிப்பு இருக்காது என்றும் சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மகப்பேறு காலத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கான சிகிச்சை குறித்து வழிகாட்டும் 2 நாள் பயிற்சி கருத்தரங்கம் சென்னை தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வளாகத்தில் நேற்று தொடங்கியது. சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“கடந்த ஒரு மாதமாக நாட்டில் கொரோனா தொற்று பரவல் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் இருந்து 19 மாதிரிகளை புனே வைராலஜி ஆய்வகத்துக்கு அனுப்பி பரிசோதனை செய்ததில், அது ஒமைக்ரான் வகை என்று கண்டறியப்பட்டது. அது வீரியமற்றது. பெரிய அளவில் உயிர் பாதிப்பு ஏற்படுத்தக்கூடியது அல்ல என்று அறிவியல் ரீதியாக தெரியவந்துள்ளது. கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களும் இருமல், சளி, காய்ச்சல் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டு 3 நாள்களில் இயல்பு நிலைக்கு திரும்பி விடுகின்றனர்.

மக்களிடம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்துள்ளதால், இதுபோன்ற வீரியமற்ற கொரோனா வைரஸ் பாதிப்பு என்பது பெரிய அளவில் இருக்காது. எனவே, மக்கள் பதற்றப்பட வேண்டாம். அதே நேரம், முதியவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், கர்ப்பிணிகள், இணை நோய் உள்ளவர்கள் பொது இடங்களுக்கு செல்லும்போது முககவசம் அணிவது அவசியம்.” என்றார்.

# பிரதமர் மோடியைச் சந்திப்பவர்களுக்கு கொரோனாப் பரிசோதனை கட்டாயம்

இந்தியா முழுவதும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையில், பிரதமர் மோடியை சந்திக்கும் அமைச்சர்களுக்கு ஆர்.டி.-பி.சி.ஆர். பரிசோதனை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியை டில்லி முதல்வர் ரேகா குப்தா உள்ளிட்ட மாநில பா.ஜ.க. நிர்வாகிகள் நேற்று அவரது இல்லத்தில் சந்தித்தனர்.

முன்னதாக அனைத்து அமைச்சர்களும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுவது அவசியம் எனவும் பிரதமருடன் மேடையில் இருப்பவர்களும் தங்கள் ஆ.ர்.டி - பி.சி.ஆர். பரிசோதனை அட்டையை காண்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்



தியா முழுவதும் கொரோனா வைரஸ் பரவி வரும் வேளையில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இந்தியாவில் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை நேற்று 7,121 ஆக உயர்ந்தது. இதில் 2,223 நோயாளிகளுடன் கேரளா முதலிடத்திலும் 1,223 நோயாளிகளுடன் குஜராத் இரண்டாமிடத்திலும் உள்ளன. இதையடுத்து டில்லி 757, மேற்கு வங்கம் 747, மகாராஷ்டிரா 615, கர்நாடகா 459, உத்தரபிரதேசம் 229, தமிழ்நாடு 204, புதுச்சேரி 10, ஹரியானா 125, ஆந்திரா 72, ம.பி. 65, கோவா 6 என்ற எண்ணிக்கையில் நோயாளிகள் சிகிச்சையில் உள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் இது வரை 74 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் மூத்த குடிமக்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம் இருப்பதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். என்றாலும் தற்போதைய வைரஸால் ஏற்படும் பாதிப்புகள் லேசானவை என்றும், பீதி அடையத் தேவையில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பண மாலையால் அமைச்சரை கௌரவித்தார் த.வெ.க. நிர்வாகி

## மன்னிப்புக் கேட்டு விஜய்க்குக் கடிதம்





அமைச்சர் எ.வ.வேலுவுக்கு பண மாலை போட்டு வரவேற்ற நிலையில், த.வெ.க. நிர்வாகி விஜய்க்கு மன்னிப்பு கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக மாவட்டமான திருவண்ணாமலை, தமிழக வெற்றிக் கழக தெற்கு மாவட்ட செயலாளர் பாரதிதாசன் கடந்த 8 ஆம் திகதி புதுமனை புகுவிழா நடத்தினார். இந்த விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் எ.வ.வேலுவுக்கு பண மாலை போட்டு பாரதிதாசன் வரவேற்றுள்ளார்.

இது தொடர்பான காணொலி சமூக வலைதளங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது. தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் தி.மு.க. அரசை விமர்சித்து வரும் நிலையில் த.வெ.க. நிர்வாகி செயல்பாடு குறித்து விஜய்க்கு கடிதம் எழுதப்பட்டது.

இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக கட்சி தலைமை பாரதிதாசனிடம் விளக்கம் கேட்டுள்ளது. இந்நிலையில், திருவண்ணாமலை தெற்கு செயலாளர் பாரதிதாசன் அக்கட்சியின் தலைவர் விஜய்க்கு மன்னிப்பு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், “புதுமனை புகுவிழாவுக்கு என்னுடைய குடும்ப நண்பரான அமைச்சர் வேலுவையும் அழைத்தேன். அவர் அமைச்சர் என்பதால் 20 ரூபா நோட்டு மாலையும், மலர் மாலையும் அணிவித்தேன்.

இதற்காக மனம் வருந்தி தலைவர் விஜயிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். இனி வரும் காலங்களில் நம் கழக சொந்தங்கள் தவிர வேறு எந்த மாற்றுக் கட்சி நிர்வாகிகளையும் அழைக்க மாட்டேன்.” என்று கூறியுள்ளார்.

# அமெரிக்கா - சீன பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தத்தில் நிறைவு; ட்ரம்ப் தகவல்



அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையிலான வர்த்தக போர் பதற்றங்களைத் தணிக்கும் நோக்கில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தத்தில் நிறைவடைந்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் அவர் இந்த விடயத்தைப் பகிர்ந்துள்ளார்.

இதன்படி, சீன மாணவர்களின் வீசாக்கள் ரத்து செய்யப்படும் என முன்னர் விடுக்கப்பட்ட அறிவிப்பு மீளப் பெறப்படும் எனவும் அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இரு தரப்புக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள சில தகவல்கள் மாத்திரமே வெளியாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இரு தரப்பும் ஜெனீவாவில் ஒருமித்த கருத்துக்களைச் செயற்படுத்துவதற்கான இணக்கப்பாட்டை எட்டியதாக அமெரிக்க வர்த்தக செயலாளர் ஹோவர்ட் லுட்னிக் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இருநாட்டுஜனாதிபதிகளும்அதனை அங்கீகரித்த பின்னர், புதிய திட்டங்களை அமுல்படுத்த முயற்சிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ட்ரம்ப் தொடர்பான விமர்சனத்துக்கு மன்னிப்புக் கோரினார் எலான் மஸ்க்




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கும், எலான் மஸ்க்குக்கும் இடையில் சமீப காலமாகக் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த இருவரும் ஒருவரையொருவர் விமர்சித்து, சமூக வலைத்தளங்களின் மூலம் மோதலில் ஈடுபட்டு வந்தனர்.

இந்தநிலையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறித்து தான் தெரிவித்த கருத்துக்களுக்கு மன்னிப்பு கோருவதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். அவர் தனது எக்ஸ் தளத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

“கடந்த வாரம் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறித்த எனது சில பதிவுகள் அளவு மீறிச் சென்றுவிட்டன. அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்” என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.



# ஈராக்கிற்கான அமெரிக்கத் தூதரகத்தை மூடுவதற்கு அமெரிக்கா தீர்மானம்

ஈராக்கில் உள்ள தமது தூதரகத்தைப் பகுதியளவில் மூடுவதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரானில் அதிகரித்துவரும் பதற்ற நிலையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானத்தை அமெரிக்கா எடுத்துள்ளது.

தூதரகத்தில் பணியாற்றும் ஊழியர்களை ஈராக்கில் இருந்து அழைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் உள்ள சில அமெரிக்கத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தலாம் என அமெரிக்கா எதிர்பார்த்ததாகவும் கூறப்படுகிறது.


மத்திய கிழக்கு ஆபத்தான இடமாக இருக்கலாம் என்பதால் அமெரிக்கப் பணியாளர்கள் மத்திய கிழக்கிலிருந்து வெளியேற்றப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று தெரிவித்தார்.

பக்கங்கள் - 3

கனடா முரசு

வியாழக்கிழமை 12/06/2025

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் வீதியில் விழுந்து கிடந்த வீடு



C2 ▶




# கரி ஆனந்தசங்கரிக்கு எதிரான இனவெறி விமர்சனத் தாக்குதல்

## கனேடிய தமிழ் அமைப்புகள் கண்டனம்

கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரியை குறிவைத்து மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் இனவெறி விமர்சனத் தாக்குதல்களை கனேடிய தமிழ் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

மேலும் இதுபோன்ற தாக்குதல்கள், தமிழ் கனேடிய சமூகத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று அந்த அமைப்புக்கள் எச்சரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

C2 ▶

# ஐரோப்பிய பாதுகாப்பு மறுசீரமைப்புத் திட்டத்தில் கையெழுத்திடுகிறார் கனேடிய பிரதமர் கார்னி



ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளுக்காக அமெரிக்காவை சார்ந்திருப்பதைக் குறைக்கும் நோக்கில் ஒரு முக்கிய ஒப்பந்தில் கனடா கைச்சாத்திடவுள்ளது.

ஜுலை 1ஆம் திகதிக்குள் கனடா ஒரு பெரிய ஐரோப்பிய பாதுகாப்பு மறுசீரமைப்பு திட்டத்தில் கையெழுத்திட முடியும் என்று கனேடிய பிரதமர் மார்க் கார்னி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும், பாதுகாப்புக்கான மூலதனச் செலவினத்தின் ஒவ்வொரு டொலரிலும் எழுபத்தைந்து சென்ட் அமெரிக்காவிற்குச் செல்கிறது. அது புத்திசாலித்தனம் அல்ல என்று கார்னி கூறியுள்ளார்.

ஐரோப்பாவுடன் நெருக்கமான பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பில் கார்னி தெரிவித்த பின்னர், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது நிர்வாகம் தனது கோல்டன் டோம் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பில் சேருவது

குறித்து கனடாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கனடா ஒரு தனி, சமமற்ற தேசமாக இருந்தால் 61 பில்லியன் டொலர்கள் செலவாகும், ஆனால் எங்கள் நேசத்துக்குரிய 51 ஆவது மாநிலமாக மாறினால் பூச்சியம் டொலர்கள் செலவாகும் என்றும் சமூக வலைதளத்தில் மார்க் கார்னி பதிவிட்டுள்ளார்.

ஆனால் முன்னதாக, ட்ரம்புடனான தனது சொந்த ஓவல் அலுவலக சந்திப்பில் மார்க் கார்னி , கனடா அமெரிக்காவில் சேர ஆர்வம் காட்டவில்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

# கேரள மாணவர் சடலமாக மீட்பு

## ரொரன்றோவில் பரபரப்பு

கனடாவில், கேரளாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், கால்வாய் ஒன்றில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

கேரளாவிலுள்ள Tripunithura என்னுமிடத்தைச் சேர்ந்தவர் Vedatman Poduval (வயது 21). கனடாவில் மூன்றாம் ஆண்டு கணினிப் பொறியியல் பயின்றுவந்த Vedatman, இம்மாதம், அதாவது, ஜூன் மாதம் 2ஆம் திகதி காணாமல்போனார்.



இந்நிலையில், 6 ஆம் திகதி, மதியம் 2.00 மணியளவில், ரொரன்றோவிலுள்ள கால்வாய் ஒன்றில் அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவர் எதனால் உயிரிழந்தார் என்பதை அறிவதற்காக அவரது உடலுக்கு உடற்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், ஆய்வு முடிவுகள் வெளியாக 15 நாள்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2022ஆம் ஆண்டு கனடாவுக்குக் கல்வி கற்பதற்காக சென்ற ஏநனய வஅயஉ, மீண்டும் கேரளாவுக்குத் திரும்பவேயில்லை.

இந்நிலையில், மகனை உயிரற்ற நிலையில்தான் காணப்போகிறோம் என்ற எண்ணம், அவரது குடும்பத்தினரை கடும் அதிர்ச்சியிலும் துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது.



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் வீதியில் விழுந்து கிடந்த வீடு

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் அதிவேக நெடுஞ்சாலை ஒன்றில் நடமாடும் வீடு ஒன்று வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

97ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலையில் இந்த அபூர்வமான சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் காரணமாக சில மணித்தியாலங்கள் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு பெரிய நடமாடும் வீடு (மூவிங் ஹோம்), அதை எடுத்துசெல்லும் லொறியில் இருந்து வழுக்கி விழுந்துள்ளது.

இந்த சம்பவம், கெலோவ்னா சர்வதேச விமான நிலையம் அருகே ஹைவே 97-இன் தெற்குப் போக்குவரத்து பாதையில் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விசித்திரமான தடையைப் பற்றிய சமூக ஊடகப் பதிவுகள் வலைதளங்களில் வைரலானதைத் தொடர்ந்து, பலரும் கருத்துகளை பகிர்ந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

### கரி ஆனந்தசங்கரிக்கு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனேடிய தமிழ் கூட்டு, கனேடிய தமிழர்களின் தேசிய சபை மற்றும் தமிழ் உரிமைகள் குழு என்பனவே அமைச்சர் மீதான இனவெறி விமர்சனங்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த விமர்சனங்கள், அமைச்சர் கரி ஆனந்தசங்கரி மற்றும் தமிழ் கனேடியர்கள் மீது தவறான மற்றும் நியாயமற்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அந்த அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

கனேடிய தமிழ் சமூகம் தொடர்பான எந்தவொரு தேசிய பாதுகாப்பு பிரச்சினைகளிலும் முரண்படாத திரையிடலை செயல்படுத்துமாறு, ஆனந்தசங்கரி, அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டதை அடுத்தே இந்த விமர்சனங்கள் எழுந்துள்ளன.

எனினும், இந்த முடிவு, மிகுந்த எச்சரிக்கையுடன், எந்தவொரு மோதலும் இல்லை என்பதை உறுதி செய்வதற்காகவே எடுக்கப்பட்டது என்று கனேடிய அமைச்சர் கரி ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் அமைச்சர் கரி ஆனந்தசங்கரிக்கு எதிரான இந்த கருத்துக்கள், தமிழ் கனேடியர்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை அச்சுறுத்துவது மட்டுமல்லாமல், கனடாவின் சமத்துவத்துவத்தையும் பாதிப்படையச் செய்யும் என்று தமிழ் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.



# காற்றின் தரம் தொடர்பில் கல்கரி பகுதியில் எச்சரிக்கை

கனடாவின் கல்கரி பகுதியில் காற்றின் தரம் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கல்கரி நகரத்தில் தற்போது காட்டுத்தீ புகை பரவல் காரணமாக மிக மோசமான காற்று தரம் நிலவுகிறது.

இதனையடுத்து கனடாவின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைப்பான Environment and Climate Change Canada (ECCC) கல்கரிக்கு காற்று தரம் குறித்த அதிகப்படியான அபாய எச்சரிக்கையை வெளியிட்டது.

அப்போது காற்றின் தரத்தைக் காட்டும் Air Quality Health Index (AQHI) மதிப்பீடு 10+ ஆக இருந்தது. இது மிகவும் உயர் அபாய நிலை என்று வகைப்படுத்தப்படுகிறது.

இந்த நிலைகளில் அனைவரின் உடல்நலத்துக்கும் ஆபத்து உள்ளது. வெளியே செல்கின்ற நேரத்தை குறைக்கவும். திறந்த வெளியில் மேற்கொள்ளப்படும்விளையாட்டுகள், நிகழ்வுகள் ஆகியவற்றை ரத்து செய்யவும் அல்லது ஒத்திவைக்கவும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கண்கள், மூக்கு, குரல் குழாய் இரைப்பு, தலைவலி மற்றும் லேசான இருமல் போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவ அவசரநிலை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறு மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# மசூதியை சேதப்படுத்திய தந்தையும் மகனும் கைது




கனடாவின் ஒரனோவில் அமைந்துள்ள மசூதி ஒன்றை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் தந்தையும் அவரது 14 வயதான மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் கடந்த ஜனவரி மாதம் பவுமன்வில்லில் உள்ள கனடியன் டயர் கடையில் யூத விரோத பிரசுரங்களை வைத்தனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

டர்ஹாம் பிராந்திய பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஜனவரி 30 ஆம் திகதி பிற்பகல் பவுமன்வில்லின் கிரீன் வீதியில் உள்ள கனடியன் டயர் கடையில் ஒருவரால் பல இடங்களில் யூத எதிர்ப்பு பிரசுரங்கள் வைக்கப்பட்டன என பொலிஸார் கூறியுள்ளனர்.

கண்காணிப்பு கமெராவில் இது பதிவாகியுள்ளது. பணியாளர்கள் பிரசுரங்களைக் கண்டதும் உடனே பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேலும், மே 24ஆம் திகதி மாலை ஓரனோவில் சர்ச் ஸ்ட்ரீட் வடக்கில் அமைந்துள்ள 111 ஆவது எண்ணுடைய மசூதிக்கு பொலிஸ் அழைக்கப்பட்டது.

அப்போது பல வாகனங்கள் மற்றும் மசூதியின் கதவுகள் சேதப்படுத்தப்பட்டிருந்தன.

இதையடுத்து, பொலிஸார் ஜூன் 10ஆம் திகதி ஓரனோவில் உள்ள வீடொன்றில் இரு சோதனைகள் மேற்கொண்டு, தந்தை மற்றும் மகனை கைது செய்தனர்.

அந்த வீட்டில் இருந்து பல முக்கியமான பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டன என கூறப்பட்டுள்ளது.

34 வயதுடைய ஆண் மீது சொத்துக்கு சேதம் விளைவித்ததற்கான குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

14 வயதுடைய மகன் மீது மத இடத்திற்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இவர்கள் இருவரும் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்